# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச் சட்டம்

*(2016 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*


*2016*, மே மாதம் 20 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 54.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க,**
**நுண்நிதியளிப்புச் சட்டம்**

[*2016 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது*]

*ச.வ.பீ 32/2012*

**நுண்நிதியளிப்புத் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற கம்பெனிகளுக்கு உரிமமளிப்பதற்காகவும், அவற்றை ஒழுங்குபடுத்துவதற்காகவும் மற்றும் மேற்பார்வை செய்வதற்காகவும்; வரையறுக்கப்பட்ட சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்புக்களை நுண்நிதியளிப்பு அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்புக்களாகப் பதிவுசெய்வதற்காகவும்; நுண்நிதியளிப்பு அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்புக்களையும் மற்றும் நுண்கடன்வழங்கு அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்புக்களையும் ஒழுங்குபடுத்துவதற்காகவும் மேற்பார்வை செய்வதற்காகவும் நியமங்களைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்கானதொரு சட்டம்.**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், இச்சட்டத்தின் வெவ்வேறு பாகங்கள், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான வெவ்வேறு திகதிகளில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*சட்டத்தின் ஏற்புடைமை.*

**2.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது:-

(அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் பொருளுக்குட்பட உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி ;

2-PL 009645 -961 (2016/01)

(ஆ) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின் பொருளுக்குட்பட ஒரு நிதிக்கம்பெனி;

(இ) 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஒரு மாகாணசபையின் நியதிச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம்;

(ஈ) 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒரு வங்கி மற்றும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒரு வங்கித்தொழிற் சங்கம்; அத்துடன்

(உ) 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச்சட்டத்தின் நியதிகளின்படி உருவாக்கப்பட்ட ஓர் உருவகம்.

(2) பாகம் VIII, பாகம் IX மற்றும் பாகம் XI தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், ஒரு நுண்நிதியளிப்பு அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்புக்கும் ஒரு நுண்கடன்வழங்கு அரசாங்கஞ் சாரா ஒழுங்கமைப்புக்கும் ஏற்புடையனவாதலாகாது.

## பாகம் I

### நுண்நிதியளிப்புத் தொழிலைக் கொண்டுநடாத்தும் கம்பெனிகளுக்கு உரிமமளித்தல்

நுண்நிதியளிப்புத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு உரிமமளிப்பதற்கான தேவைப்பாடு.

**3**. இரண்டாம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிரவும் அவ்வாறன்றியும், ஆளொருவர் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பெனியாகவும், ஓர்உத்தரவாதக் கம்பெனி, ஒரு தனியார் கம்பெனி, ஒரு கரைகடந்த கம்பெனி அல்லது வெளிநாட்டுக் கம்பெனியாக இல்லாமலுமிருப்பின், அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்றுக்காக விண்ணப்பிப்பதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

*உரிமமளித்தலுக் கான நடவடிக்கை முறை.*

**4.** (1) உரிமமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் காலத்துக்குக்காலம் சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேவைப்பாடுகளுக்கும் அத்தகைய படிவத்துக்கும் இணங்கி யொழுகவும், அத்தகைய தகவலுடனும் மதிப்பீட்டுக் கட்டணத்துட னும் சேர்த்தும் சபைக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, (1)ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பத் தைப் பெற்றதன்மேல் அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்வதுடன் அத்தகைய மேலும் தகவல்களையும், ஆவணங்களையும் கோரலாமென்பதுடன்,-

(அ) அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் சபையினால் விதிக்கப்பட்ட எல்லாத் தேவைப்பாடுகளுக்கும் விண்ணப்பதாரர் இணங்கியொழுகியுள்ளாரென்றும்; அத்துடன்

(ஆ) விண்ணப்பதாரருக்கு உரிமம் ஒன்றை வழங்குதலானது அதனது கடன்கொடுநரதும் மற்றும் வேறு பாக்கிய தாரரினதும் அக்கறைகளுக்குப் பாதகமானதாகவிருக்கா தென்றும்,

திருப்திப்படுவதன்மேல், தகுதியானவையெனச் சபை கருதக்கூடிய வாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைவாக உரிம மொன்றை அது வழங்கலாம் அல்லது அது அவ்வாறு திருப்திப் படாதவிடத்து விண்ணப்பத்தை நிராகரித்து அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய பணிப்பை வழங்கலாம்.

*உரிமத்தின் படிவமும் கால எல்லையும்.*

**5.** சபையினால் வழங்கப்பட்ட உரிமமொன்று, அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் சபையினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல்வேண்டுமென்ப துடன், உரிமமானது எத்திகதியன்று வழங்கப்படுகின்றதோ அத்திகதியை அடுத்துப்பின்வரும் திசெம்பர் முப்பத்தோராம் நாள்வரை வலுவிலிருத்தலும் வேண்டும்; அத்துடன் புதிய விண் ணப்பம் செய்யப்படுவதன்மீது ஆண்டுதோறும் புதுப்பிக்கப் படற்பாலதாதல் வேண்டும்.

உரிமக் கட்டணம்.

**6.** உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனி ஒவ்வொன்றும், அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் சபையால் காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையில் ஆண்டு உரிமக் கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

உரிமத்தை வெளிக்காட்டி வைத்தல்.

**7.** உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனி ஒவ்வொன்றும் அதன் பிரதான தொழில் இடத்தில் அதன் உரிமத்தை வெளிக்காட்டி வைத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உரிமத்தின் பிரதியொன்றை அதன் கிளைகளுள் ஒவ்வொன்றிலும் வெளிக்காட்டி வைத்தலும் வேண்டும்.

இடாப்பொன்றைச் சபை பேணுதல் வேண்டுமென்பது.

**8.** சபையானது உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனிகள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

## பாகம் II

## உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனிகளின் மீதான தொழில் மட்டுப்பாடுகள்

தொழில்களின் வகைகள் குறித்துரைக்கப்படுதல் வேண்டுமென்பது.

**9.** (1) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் விதிக்கப்படக்கூடியவாறான அல்லது அத்தகைய உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனிக்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக, உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியொன்று, இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான அத்தகைய வகைகளினவான தொழில்களையும் மற்றும் (2)ஆம் உட்பிரிவின்கீழ் சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் வகையினதான தொழிலையும் கொண்டுநடாத்தலாம்.

*(2) சபையானது இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்படாதுள்ளதும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியொன்று கொண்டுநடாத்தக்கூடியதுமான ஏதேனும் தொழில் வகையினதான தொழிலை வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் குறித்துரைக்கலாம்.*

*(3) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியொன்று, இதற்கான அட்டவணையில் தரப்பட்டிராத அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் சபையினால் குறித்துரைக்கப்பட்டிராத ஏதேனும் வகையினதான தொழிலைக் கொண்டுநடாத்துதலாகாது.*

*(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பு ஒவ்வொன்றும் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின்முன் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் அறிவிப்பானது அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*(5) அறிவிப்பொன்று இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படும் திகதி பற்றிய அறிவிப்பு, வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.*

## *பாகம் III*

### உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனிகளை முகாமை செய்தல்

*பொதுக் கண்காணிப்பு.*

*__10.__ (1) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனி ஒன்றின் பொதுக் கண்காணிப்பும் அலுவல்களின் முகாமையும், நல்லெண்ணத்துடனும், வைப்புச்செய்தோர், கடன்கொடுநர் மற்றும் பாக்கியதாரரது சிறந்த அக்கறையுடனும் அத்தகைய கம்பெனியின் தொழிலையும் அலுவல்களையும் முகாமை செய்ய வேண்டிய அத்தகைய பணிப்பாளர் சபைக்கு உரித்தாவதாதல் வேண்டும்.*

*(2)* உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியொன்று, அக்கம்பெனியின் உறுப்பினர்களினதும் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களினதும் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் பெயர்களைக் கொண்டுள்ள இடாப்பு ஒன்றைப் பேணுதல் வேண்டும்.

## பாகம் IV

## உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனிகளுக்கான பணிப்புக்களும் அவற்றை ஆளுகின்ற விதிகளும்

*சபையின் பணிப்புக்கள்.*

**11.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் (இப்பிரிவில் "கம்பெனி" எனக்குறிப்பீடு செய்யப்படும்) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனிகளுக்கு அல்லது ஏதேனும் தனியொரு உரிமமளிக்கபட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனிக்கு அல்லது ஏதேனும் தொகுதியினவான அல்லது வகுதியினவான நுண்நிதியளிப்புக் கம்பெனிகளுக்கு அத்தகைய கம்பெனியின் தொழிலினது ஏதேனும் அம்சம் மற்றும் கூட்டிணைப்பு அலுவல்கள் எந்தமுறையில் நடாத்தப்பட வேண்டுமோ அந்த முறை பற்றியும், குறிப்பாக பின்வருவன பற்றியும் சபையானது பணிப்புக்களை வழங்கலாம்:-

(அ) எந்த நியதிநிபந்தனைகளின்கீழ் அத்தகைய கம்பெனியினால் வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படலாமோ அந்த நியதிநிபந்தனைகளும், அத்தகைய வைப்புக்களின் மீது செலுத்தற்படற்பாலனவான ஆகக்கூடிய வட்டி வீதங்களும், எந்த ஆகக்கூடிய காலப்பகுதிக்கு வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படலாமோ அந்த ஆகக்கூடிய காலப்பகுதியும் அத்துடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கணக்குகளில் ஓராளின் பெயரில் கம்பெனியொன்றில் வைப்பிலிடப்படக்கூடிய ஆகக்கூடிய தொகையும்;

(ஆ) எந்த நியதிநிபந்தனைகளின்கீழ் அத்தகைய கம்பெனியினால் ஏதேனும் கடன், கடன்வசதி அல்லது ஏதேனும் வகையினதான நிதிசார் வசதி வழங்கப்படலாமோ அந்த நியதிநிபந்தனைகளும், அத்தகைய கடன்கள், கடன்

வசதிகள் அல்லது வேறுவகையினவான நிதிசார் வசதி என்பன மீது விதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய வட்டி வீதங்களும் மற்றும் அத்தகைய ஏதேனும் கடன், கடன் வசதி அல்லது வேறு வகையினதான நிதிசார் வசதி எந்த ஆகக்கூடிய காலப்பகுதிகளுக்காக வழங் கப்படலாமோ அந்த ஆகக்கூடிய காலப்பகுதிகளும்;

(இ) தரகுகள், கழிப்பனவுகள், கட்டணங்கள் அல்லது எத்தகையனவுமான வேறு பெறுகைகள் அல்லது கொடுப்பனவுகள் என்ற வகையாக அத்தகைய கம்பெனிக்குச் செலுத்தப்படக்கூடிய அல்லது அதனால் விதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய வீதங்களும்;

(ஈ) எந்த நியதிநிபந்தனைகளின் கீழ் அத்தகைய கம்பெனியினால் முதலீடுகள் செய்யப்படலாமோ அந்நியதி நிபந்தனைகளும் மற்றும் அத்தகைய முதலீடுகளின் ஆகக்கூடிய அனுமதிக்கத்தக்க முதிர்வுகளும்;

(உ) பேணப்படவேண்டிய உள்ளக மூலதனத்தின் மற்றும் மொத்த மூலதனத்தின் ஆகக்குறைந்த தொகை;

(ஊ) ஒதுக்கு நிதியமொன்றைத் தாபித்தலும், அத்தகைய நிதியத்துக்குக் கம்பெனியொன்று கைமாற்ற வேண்டிய வரிக்கு பின்னரான ஆண்டு இலாபங்களின் ஆகக் குறைந்த நூற்றுவீதமும் மற்றும் அத்தகைய நிதியத்தின் ஏனைய தொழிற்பாடுசார் அம்சங்களும்;

(எ) கம்பெனியொன்றின் மூலதனம், அத்தகைய கம்பெனியின் சொத்துக்கள் மற்றும் மொத்த வைப்புப் பொறுப்புகளுக்கு எந்த ஆகக்குறைந்த விகிதத்தைக் கொண்டிருக்குமோ அந்த ஆகக்குறைந்த விகிதம்;

(ஏ) கம்பெனியொன்றின் திரவச் சொத்துக்கள், அத்தகைய கம்பெனியின் மொத்த வைப்புப் பொறுப்புகளுக்கு எந்த ஆகக்குறைந்த விகிதத்தைக் கொண்டிருக்க வேண் டுமோ அந்த ஆகக்குறைந்த விகிதம்;

(ஐ) மொத்த நிலுவையாகவுள்ள வைப்புப் பொறுப்புக்கள், அத்தகைய கம்பெனியின் மொத்த நிலுவையாகவுள்ள நிதிசார் வசதிகளுக்கு எந்த ஆகக்கூடிய விகிதத்தைக் கொண்டிருக்க வேண்டுமோ அந்த ஆகக்கூடிய விகிதம்;

(ஒ) குறைந்த வருமானம்பெறும் ஆட்களுக்கும் நுண் தொழில்முயற்சிகளுக்கும் கம்பெனியினால் வழங்கப் பட்ட நிலுவையாகவுள்ள நிதிசார் வசதி, அத்தகைய கம்பெனியினால் வழங்கப்பட்ட மொத்த நிலுவை யாகவுள்ள நிதிசார் வசதிக்கு எந்த ஆகக்குறைந்த விகிதத்தைக் கொண்டிருக்க வேண்டுமோ அந்த ஆகக் குறைந்த விகிதம்;

(ஓ) வைப்புக்காப்புறுதி நிதியமொன்றைத் தாபித்தலும், அத்தகைய கம்பெனி அத்தகைய நிதியத்துக்குக் கைமாற்றவேண்டிய கட்டுப்பணமும் மற்றும் அத்த கைய நிதியத்தின் ஏனைய தொழிற்பாடுசார் அம்சங் களும்;

(ஔ) அத்தகைய கம்பெனியினால் பின்பற்றப்படவேண்டிய உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் முகாமை மற்றும் கூட்டிணைப்பு ஆளுகைக்கோவை;

(க) அத்தகைய கம்பெனியினால் பின்பற்றப்படவேண்டிய நடத்தைக் கோவை;

(ங) அத்தகைய கம்பெனியின் பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் அதில் குறித்துரைக்கப்பட்ட பங்குடைய ஆட்களின் தகுதியையும் யோக்கியதையும் மதிப்பீடு செய்வதற்கான கட்டளைக்கற்கள்;

(ச) அத்தகைய கம்பெனியின் கூட்டிணைப்பு அல்லது தொழில் அலுவல்களுக்கான கட்டமைப்புச்சார் மாற்றங்களின் மீதான மட்டுப்பாடுகள்;

(ஞ) *அத்தகைய கம்பெனியின் ஒரு பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அலுவலர், செயலாளர் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் என்ற பதவியில் நியமிக்கப்பட, அதற்குத் தேர்ந்தெடுக்கப்பட அல்லது அதைத் தாங்க தகைமையிழப்பதற்கான காரணங்கள்;*

(ட) *அத்தகைய கம்பெனியின் பணிப்பாளர்களாக நியமிக் கப்படுவதற்கு, தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு மத்திய வங்கித் திணைக்களப் பணிப்பாளரின் ஏலவேயான அங்கீ காரத்தைப் பெறுவதற்கான தேவைப்பாடு;*

(ண) *அத்தகைய கம்பெனியின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் முக்கிய முகாமைத்துவ ஆளணி யினரினதும் நியமனத்துக்காக மத்திய வங்கித் திணைக் களப் பணிப்பாளரின் ஏலவேயான அங்கீகாரத்தைப் பெறுவதற்கான தேவைப்பாடு-*

இப்பிரிவின் நோக்கத்துக்காக,-

"முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்" என்பது நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லா மலோ ஏதேனும் நிதிக்கம்பெனியின் செயற்பாடு களைத் திட்டமிடுதல், இயக்குதல் அத்துடன் கட்டுப்படுத்தலுக்கான அதிகாரத்தையும் பொறுப்பையும் கொண்டுள்ள ஆளொருவர் என்று பொருள்படும்;

"குறித்துரைக்கப்பட்ட" என்பது அதன் சார்பாக ஆக்கப்படும் விதிகள் மூலம் சபையினால் குறித் துரைக்கப்பட்டவை என்று பொருள்படும்.

*பணிப்புக்களுடன் இணங்கியொழுகு தலைக் கண் காணித்தல்.*

**12.** (1) பதினோராம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புக் களுடன் இணங்கியொழுகுதலைக் கண்காணிக்கும் முறைபற்றிப் பணிப்பாளருக்கு சபையானது வழிகாட்டுநெறிகளை வழங்க லாம்.

(2) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியொன்று 11 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் இணங்கியொழுகத் தவறுமிடத்து, பணிப்பாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் வழிகாட்டுநெறிகளில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, சபைக்கு அத்தகைய நிகழ்வை அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன், அதன்மேல் இச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

சபை விதிகளை ஆக்கலாம்.

**13.** (1) சபையானது, எந்தக் கருமம் தொடர்பில் விதிகள் ஆக்கப்படுவதற்கு இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் கருமம் தொடர்பில் விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி சபையானது குறிப்பாகப் பின்வரும் கருமங்கள் எல்லாம் தொடர்பில் அல்லது அவற்றுள் ஏதேனும் கருமம் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்:-

(அ) இச்சட்டத்தின்கீழ் உரிமமளிப்பதற்கான கட்டளைக்கற்கள்;

(ஆ) நுண்நிதியளிப்புக் கம்பெனியொன்றாக இருப்பதற்கான ஓர் உரிமத்துக்கான விண்ணப்பமொன்றுக்கான மதிப்பீட்டுக் கட்டணம்;

(இ) நுண்நிதியளிப்புக் கம்பெனிகளினால் சபைக்குச் செலுத்தப்படற்பாலதான ஆண்டு உரிமக் கட்டணம்;

(ஈ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்கள்.

(3) இச்சட்டத்தின்கீழ் சபையால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

## பாகம் V

## உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனிகளின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு

*உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியொன்றின் நிதியாண்டு மற்றும் கணக்குகளின் கணக்காய்வு.*

**14.** (1) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனி ஒவ்வொன்றும், ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும்-

(அ) அந்நிதியாண்டின் முடிவிலுள்ளவாறான நிதிநிலைமை பற்றிய கூற்றொன்று; அத்துடன்

(ஆ) அத்தகைய நிதியாண்டு தொடர்பில் அனைத்துமடங்கிய வருமானம் பற்றிய கூற்றொன்று,

உள்ளடங்கலாக இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியொன்றினால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தகைமைபெற்ற கணக்காய்வாளரொருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியொன்றின் நிதியாண்டு ஒவ்வோராண்டும் சனவரி முதலாம் திகதியிலிருந்து தொடங்குதல் வேண்டும்.

(4) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனி ஒவ்வொன்றும், ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவின் பின்னரான மூன்று மாதங்களினுள், பின்வருவனவற்றைப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்:-

(அ) (i) நிதியாண்டின் முடிவிலுள்ளவாறாகக் கம்பெனியின் நிதிநிலைமை பற்றிய கூற்று;

(ii) அந்த நிதியாண்டுக்காக கம்பெனியின் அனைத்து மடங்கிய வருமானம் பற்றிய கூற்று ;

உள்ளடங்கலாகக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள்;

(ஆ) நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கணக்காய்வாளரின் அறிக்கை;

(இ) கம்பெனியின் அலுவல்களின் நிலைமை தொடர்பாகப் பணிப்பாளர்களினாலான அறிக்கை; அத்துடன்

(ஈ) கம்பெனியின் பணிப்பாளர்கள் சபைக்கான கணக்காய்வாளரின் அந்தரங்கமான கடிதம் ஏதேனுமிருப்பின் அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி.

(5) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனி ஒவ்வொன்றும், அடுத்து வருகின்ற நிதியாண்டுக்கான அந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வெளிக்காட்டி வைக்கப்படும்வரை, அதன் தொழிலிடங்களுள் ஒவ்வொன்றிலும் துலாம்பரமானவோர் இடத்தில் (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களை வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

(6) சபையானது, இப்பாகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படிவங்களையும் செய்யப்படவேண்டிய எவையேனும் வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகளையும் குறித்துரைக்கலாம் என்பதுடன், அத்தகைய படிவங்கள் குறித்துரைக்கப்பட்டிருக்குமிடத்து, உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனி ஒவ்வொன்றினதும் நிதிக்கூற்றுக்கள் அத்தகைய படிவத்தில் தயாரிக்கப்படுதலும் வேண்டும்.

(7) சபையினால் வேறுவகையாகத் தீர்மானிக்கப்பட்டாலொழிய, உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியொன்றின் நிதிக்கூற்றுக்கள் பிரதான நிறைவேற்று அலுவலரினாலும் மற்றும் பணிப்பாளர்கள் சபையின் இரண்டு உறுப்பினர்களினாலும் அத்தகைய கம்பெனியின் சார்பில் கையொப்பமிடுதல் வேண்டும்.

## பாகம் VI

## உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனிகளை பரிசோதனை செய்தலும் மேற்பார்வை செய்தலும்

*உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனிகளைப் பரிசோதனை செய்தலும் மேற்பார்வை செய்தலும்.*

**15.** (1) பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட மத்திய வங்கியின் எவரேனும் அலுவலர் அல்லது சபையின் அங்கீகாரத்துடன் பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட நுண் நிதியளிப்புக் கம்பெனியின் கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை எந்நேரத்திலும் பரிசோதனை செய்யலாம் என்பதுடன், அந்நோக்கத்துக்காகப் பின்வருவனவற்றுள் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றைச் செய்யலாம்:-

(அ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியை அல்லது ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் ஒரு பணிப்பாளரை, செயலாளரை, முகாமையாளரை, ஊழியரை, கணக் காய்வாளரை, முகவரை அல்லது ஒப்பந்தக்காரரை, அவசியமானதென அவர் கருதுகின்றவாறான அத்தகைய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவும் படியும், அத்தகைய நுண்நிதியளிப்புக் கம்பெனியின் அச்சு அல்லது இலத்திரனியல் வடிவத்தில் பேணப் பட்ட புத்தகங்களையும், பதிவேடுகளையும், கோப்புக் களையும், இடாப்புக்களையும், மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களையும் சோதனைக்குக் காண்பிக்கும்படியும், அத்தகைய புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புக்கள், இடாப்புக்கள் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்கள் என்பவற்றின் தேவைப்படுத்தப்பட்டவாறான ஏதேனும் வடிவத்திலான மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதி களை வழங்கும்படியும் தேவைப்படுத்தலாம்;

(ஆ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் வளவுகளினுள் அல்லது களஞ்சியப் படுத்துகை இடப்பரப்பினுள் பிரவேசித்து, வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் அச்சு

அல்லது இலத்திரனியல் வடிவத்தில் பேணப்பட்ட புத்தகங்களை, பதிவேடுகளை, கோப்புக்களை, இடாப்புக்களை மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாமென்பதுடன், அத்தகைய புத்தகங்கள், பதிவேடுகள், கோப் புக்கள், இடாப்புக்கள் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்கள் என்பவற்றின் ஏதேனும் வடிவத்திலான மெய்யென்றுறுதிப்படுத் தப்பட்ட அல்லது வேறுவகையான பிரதிகளையும் பெறலாம்;

(இ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியை அல்லது ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் ஒரு பணிப்பாளரை, முகாமையாளரை, ஊழியரை, முகவரை, ஒப்பந்தக் காரரை அல்லது செயலாளரை, பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளரொருவரினால் கணக்காய்வு செய்யப்படுவதற்காக, அத்தகைய உரிம மளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் கணக்கு களைச் சமர்ப்பிக்கும்படியும், அத்தகைய தகவலைக் கொடுத்துதவும்படியும், அச்சு அல்லது இலத்திரனியல் வடிவத்தில் பேணப்பட்ட அத்தகைய புத்தகங்களையும், பதிவேடுகளையும், கோப்புக்களையும், இடாப்புக்களை யும் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களையும் காண்பிக்கும்படியும் தேவைப்படுத்தலாம்;

(ஈ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் எவரேனும் பணிப்பாளரிடம், பங்குதார ரிடம், செயலாளரிடம், முகாமையாளரிடம், ஊழியரி டம், முகவரிடம், கணக்காய்வாளரிடம் அல்லது ஒப்பந்தக்காரரிடம் அத்துடன் அத்தகைய உரிமமளிக் கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் தொழில் அல்லது கூட்டிணைப்பு அலுவல்கள் தொடர்பான தகவலுடன் பரிச்சயமுள்ளவராக அல்லது அதனை அறிந்துள்ளவராக அல்லது அதனைத் தனதுடைமை யில் வைத்திருப்பவராக இருக்கக்கூடியவரான வேறெவ ரேனுமாளிடம் கேள்விகள் கேட்டு கூற்றுக்களைப் பதிய லாம் அல்லது அவசியமாயின், சத்தியக்கடதாசி மூலமாக

எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு மறுமொழிகள் சமர்ப்பிக்கும்படி அவர்களைப் பணிக்கலாம் அல்லது அவசியமாயின் (17ஆம் அத்தியாயமான) சத்தியங்கள் அத்துடன் உறுதியுரை கட்டளைச் சட்டத்துக்கிணங்கச் சத்தியத்தை அல்லது உறுதி உரையை எடுத்தோதலாமென்பதுடன், கேள்விகளைக் கேட்கச் செய்து கூற்றுக்களைப் பதியலாம் அல்லது பதியச்செய்யலாம்;

(உ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் தொழில் அல்லது கூட்டிணைப்பு அலுவல்கள் தொடர்பான தகவலுடன் பரிச்சயமுள்ளவராக அல்லது அதனை அறிந்துள்ளவராக அல்லது அதனை உடைமையில் வைத்திருப்பவராக அல்லது அத்தகவலைக் கொண்டுள்ளவரெனக் காணப்படுகின்றவராக இருக்கக் கூடியவரான எவரேனுமாளிடமிருந்து எழுத்திலான அறிவித்தல் மூலம் தகவல் கோரலாமென்பதுடன், தேவைப்படின், அத்தகைய ஆளை நேர்காணலொன்றுக்கு வருமாறும் அழைக்கலாம் ;

(ஊ) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் எவரேனும் தொடர்புபட்ட திறத்தவரை, அத்தகைய தொடர்புபட்ட திறத்தவர் பற்றி, பணிப்பாளர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொடுத்துதவும்படியும் அச்சு அல்லது இலத்திரனியல் வடிவத்தில் பேணப்பட்ட புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புக்கள், இடாப்புக்கள் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களைச் சோதனைக்காகக் காண்பிக்கும்படியும் அத்தகைய புத்தகங்களின், பதிவேடுகளின், கோப்புக்களின், இடாப்புக்களின் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களின் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளைத் தேவைப்பட்டவாறான ஏதேனும் வடிவத்தில் வழங்கும்படியும் தேவைப்படுத்தலாம்.

இப்பந்தியின் நோக்கங்களுக்காகத் “தொடர்புபட்ட திறத்தவர்” என்பது, ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் கொளிக் கம்பெனி, ஏதேனும் துணைநிலை அல்லது இணைக் கம்பெனி

அல்லது ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் கொளிக்கம்பெனியின் ஏதேனும் துணைநிலை அல்லது இணைக்கம்பெனி அல்லது பணிப்பாளரின் கருத்தில் ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியில் கணிசமானளவு நிதிசார் அக்கறையை அல்லது குறிப்பிடத்தக்க முகாமைத்துவ அக்கறையைக் கொண்டுள்ள வேறேதேனும் உருவகம் அல்லது தனியாள் என்று பொருளாகும்.

(2) அத்தகைய பரிசோதனைக்கான ஆகுசெலவு உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியிடமிருந்து அறவிடப்படலாம்.

(3) இப்பிரிவின்கீழ் ஒவ்வோராளின்மீதும் விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் அவரது கடமையாதல் வேண்டுமென்பதுடன் -

(அ) இப்பிரிவின் கீழ்த் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலை வழங்குவதற்கு அல்லது ஏதேனும் புத்தகத்தை, பதிவேட்டை, கோப்பை, இடாப்பை அல்லது அத்தகைய வேறு ஆவணத்தை, பொருளை அல்லது சாமானைச் சோதனைக்காகக் காண்பிப்பதற்குத் தவறுகின்றவரான;

(ஆ) ஒரு நேர்காணலுக்காக அழைக்கப்படும்போது நேரடியாக வருகை தருவதற்குத் தவறுகின்றவரான;

(இ) பொய்யான அல்லது பூர்த்தியற்ற அல்லது பிழையான தகவலை, புத்தகத்தை, பதிவேட்டை, கோப்பை, இடாப்பை அல்லது அத்தகைய வேறு ஆவணத்தை, பொருளை அல்லது சாமானை வழங்குகின்றவரான;

(ஈ) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பணியைப் புரிகையில் பணிப்பாளருக்கு அல்லது (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு முட்டுக்கட்டையிடுகின்றவரான,

எவரேனுமாள் இச்சட்டத்தினகீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும்.

(4) பணிப்பாளரானவர், (1)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி நடாத்தப்பட்ட பரிசோதனையானது முடிவுற்றதன் மேல், உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியானது-

(அ) அதன் வைப்பீட்டாளர்களினதும் கடன் கொடுநரினதும் மற்றும் வேறு பாக்கியதாரரதும் நலனுக்குப் பங்கம் விளைவிக்கின்றனவாகவுள்ள நிலையுறுதியற்ற அல்லது முறையீனமான நிதிச் செயல்முறைகளைப் பின்பற்றி அதன் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றதென்று; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் பணிப்பை, விதியை, கட்டளையை அல்லது தேவைப்பாட்டை மீறியுள்ளதென்று அல்லது அதற்கிணங்கியொழுகத் தவறியுள்ளதென்று,

வெளிப்படுத்தினால் சபைக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

*உரிமமளிக்கப்பட்ட நுண் நிதியளிப்புக் கம்பெனிமீது சபையின் மேற்பார்வைசார் வழிமுறைகள்.*

**16.** (1) சபையானது பணிப்பாளரினால் செய்யப்பட்ட அறிக்கையொன்றின் மீது, உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியொன்று –

(அ) அதன் வைப்பீட்டாளர்களினதும் கடன் கொடுநரினதும் மற்றும் வேறு பாக்கியதாரரதும் நலனுக்குப் பாதகம் விளைவிக்கின்றனவாகவுள்ள நிலையுறுதியற்ற அல்லது முறையீனமான நிதிச் செயல்முறைகளைப் பின்பற்றி அதன் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றதென்று அல்லது கொண்டு நடாத்தும் வழிமுறையிலுள்ளதென்று; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் பணிப்பை, விதியை, கட்டளையை அல்லது தேவைப்பாட்டை மீறியுள்ளதென்று அல்லது அதற்கிணங்கியொழுகத் தவறியுள்ளதென்று,

அபிப்பிராயப்படுமிடத்து, சபையானது பின்வருவனவற்றுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைச் செய்யலாம்:-

(i) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியை அத்தகைய ஏதேனும் செயல்முறையை இல்லாதொழிக்குமாறு பணிக்கலாம்;

(ii) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியை உடனடியாக அல்லது சபையால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள், அத்தகைய நுண்நிதியளிப்புக் கம்பெனி இணங்கியொழுகத் தவறியுள்ள இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட பணிப்பு, விதி, கட்டளை அல்லது தேவைப்பாடு என்பவற்றுடன் இணங்கியொழுகுமாறு பணிக்கலாம்;

(iii) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியை, அத்தகைய செயல்முறை அல்லது மீறுகையிலிருந்து விளைகின்ற எதிர்மறையான நிலைமைகளைச் சரிப்படுத்துவதற்கு அவசியமான வாறான நடவடிக்கையை எடுக்குமாறு பணிக்கலாம்;

(iv) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது கட்டுப்பாட்டாளரை, நுண்நிதியளிப்புக் கம்பெனியில் அல்லது அது தொடர்பாக ஏதேனும் பணியை நிறைவேற்றுவதிலிருந்து தடுக்கலாம்;

(v) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமை யாளரை அல்லது ஊழியரை அகற்றலாம்;

(vi) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் மூலதனத்தை அதிகரிப்பதற்கான ஒழுங்கேற்பாட்டைச் செய்வதன்மூலம் அல்லது பணிப்பாளர்

சபையை மீள அமைத்துருவாக்குவதன்மூலம் அல்லது அத்தகைய இருவழிமுறைகள்மூலம் அதனை மீளஒழுங்கமைக்கலாம்;

(vii) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியை வேறோர் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியுடன் அல்லது அத்தகைய ஒன்றிணைப்புக்குச் சம்மதமளிக்கின்ற வேறு ஏதேனும் நிறுவனத்துடன் ஆன ஒன்றிணைப்புக்கு அவசியமானவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்யலாம்;

(viii) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் தொழிலை முறையாக நடாத்துவதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் அலுவல்களை முகாமை செய்வதற்கென ஆளொருவரை நியமிக்கலாம்.

(ix) அத்தகைய நுண்நிதியளிப்புக் கம்பெனிமீது தண்டமொன்றை ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கு, அறிவித்தல் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் காரணங்காட்டுமாறு அதனைத் தேவைப்படுத்தி அக்கம்பெனிமீது எழுத்திலான அறிவித்தலொன்றைச் சேர்ப்பித்து, அதற்கெனக் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள் காரணங்காட்டத் தவறுவதன் மேல் அல்லது காட்டப்பட்ட காரணம் சபையைத் திருப்திப்படுத்தாதவிடத்து, சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் செலுத்தற்படற்பாலதான இரண்டிலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு தண்டத்தை விதிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளையினால் அல்லது பணிப்பினால் அல்லது எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கையால் இன்னலுறும் ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனி, அத்தகைய கட்டளை அல்லது

பணிப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது நடவடிக்கை எடுக்கப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவுறுமுன்னர் எழுத்தில் சபைக்கு மேன்முறையீடு செய்யலாமென்பதுடன், சபையானது அத்தகைய மேன்முறையீடு கிடைக்கப்பெற்றதி லிருந்து அறுபது நாட்களினுள் அதன் முடிபை அளித்தலும் வேண்டும்.

## பாகம் VII

### உரிமத்தை இல்லாதாக்குதலும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியை ஒடுக்குதலும்

*உரிமத்தை இல்லாதாக்குவதற்கான ஏதுக்கள்.*

**17.** சபையானது பின்வரும் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஏதுக்களின்மீது உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியொன்றின் உரிமத்தை இல்லாதாக்கலாம்:-

(அ) உரிமம் வழங்கப்பட்டதிலிருந்து ஒன்பது மாதங்களினுள் தொழிலைத் தொடங்குவதற்குத் தவறுதல்;

(ஆ) அதனால் உறப்பட்ட ஏதேனும் தனிசு கொடுக்குமதியாக வருவதன்மேல் அத்தகைய தனிசைக் கொடுத்துத் தீர்க்கத் தவறுதல்;

(இ) அதன் கடன்கொடுநருடன் ஏதேனும் இணக்கத்தை அல்லது ஒழுங்கேற்பாட்டைச் செய்வதற்கு உத்தேசித்தல் அல்லது செய்தல் அல்லது ஒழித்துக்கட்டுவதற்கு உட்படுதல் அல்லது ஒடுக்கப்படுதல் அல்லது வேறு வகையில் கலைக்கப்படுதல்;

(ஈ) நுண்நிதியளிப்புத் தொழிலைக் கொண்டுநடத்தா தொழிதல்;

(உ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு அல்லது இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட, விதிக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு தேவைப்

பாட்டுக்கு, விதிக்கு, கட்டளைக்கு அல்லது தீர்மானத்துக்கு முரணாகச் செயற்படுதல்;

(ஊ) ஆண்டு உரிமக் கட்டணத்தைச் செலுத்துவதற்குத் தவறுதல்;

(எ) அதன் வைப்பீட்டாளர்களின், ஏனைய கடன் கொடுநரின் அல்லது பொருளாதாரத்தின் நலன்களுக்குப் பாதகம் விளைவிக்கக்கூடியவொரு முறையில் அதன் தொழிலைக் கொண்டு நடாத்துதல் ; அல்லது

(ஏ) சபைக்குப் பொய்யான, பிழைவழியுய்க்கும் அல்லது செம்மையற்ற தகவலைக் கொடுத்துதவுதல் அல்லது முக்கியமான நிகழ்வுகளைச் சபையிடமிருந்து மறைத்தல் அல்லது சபைக்கு வெளிப்படுத்துவதற்குத் தவறுதல்.

*உரிமத்தை இல்லாதாக்குவதற்கான நடவடிக்கை முறை.*

**18.** (1) சபையானது, உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியொன்றின் உரிமத்தை இல்லாதாக்குவதற்கு முன்னர், அத்தகைய உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனிக்கு, எழுத்தில், அதன் உரிமம் ஏன் இல்லாதாக்கப்படுதலாகாது என்பதற்கான காரணத்தை அறிவித்தல் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து முப்பது நாட்களினுள் காட்டுமாறு தேவைப்படுத்துகின்ற ஓர் அறிவித்தலைச் சேர்ப்பித்தல் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியானது குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் காரணம் காட்டுவதற்குத் தவறுமிடத்து, சபையானது உரிமத்தை இல்லாதாக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அதற்கு வழங்கப்பட்ட அறிவித்தலுடன் இணங்கியொழுகி, அத்தகைய உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியானது குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் காரணம் காட்டுமிடத்து, சபையானது வழங்கப்பட்ட காரணங்களைக் கருத்திற் கொண்டதன் பின்னரும், அதன் ஆட்சேபனைகளை ஆதாரப்படுத்துவதற்கு உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியைக் கேட்டதன் பின்னரும்-

(அ) அத்தகைய நுண்நிதியளிப்புக் கம்பெனியானது அதன் உரிமம் ஏன் இல்லாதாக்கப்படுதலாகாது என்பதற்குப் போதிய காரணம் காட்டியுள்ளதென அது திருப்திப் படுமாயின் உரிமத்தை இல்லாதாக்காது விடலாம்; அல்லது

(ஆ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியானது அதன் உரிமம் ஏன் இல்லாதாக்கப் படுதலாகாது என்பதற்கான போதிய காரணம் காட்டவில்லை என அது திருப்திப்படுமிடத்து, உரிமத்தை இல்லாதாக்கலாம்.

(4) உரிமமொன்று இல்லாதாக்கப்படும் பட்சத்தில், சம்பந்தப் பட்ட உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனிக்கு அத்தகைய இல்லாதாக்குகை பற்றி உடனடியாக அறிவிக்கப் படுதல் வேண்டுமென்பதுடன், இல்லாதாக்குகையானது அத்த கைய அறிவிப்புத் திகதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும். சபையானது அத்தகைய இல்லாதாக்குகை பற்றிய அறிவித்தலை இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது ஒரு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்தச் செய்தித்தாள்களிலேனும் வெளியிடுதல் வேண்டும்.

(5) ஓர் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் உரிமம் இல்லாதாக்கப்படுமிடத்து, சபையானது, 8 ஆம் பிரிவின் கீழ் பேணப்படும் இடாப்பிலிருந்து அத்தகைய உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியின் பெயரை அகற்றுதல் வேண்டு மென்பதுடன் அத்தகைய நுண்நிதியளிப்புக் கம்பெனிக்கு, ஒடுக்குவதற்கான பணிப்புக்கள் உட்பட, சபை அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய பணிப்புக்களை அது வழங்க லாம்.

(6) அத்தகைய நுண்நிதியளிப்புக் கம்பெனி சபையால் குறித் துரைக்கப்பட்ட காலத்துள் (5) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களுக்கு இணங்கியொழுகத் தவறு மிடத்து, சபையானது 19 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய நுண்நிதி யளிப்புக் கம்பெனியின் ஒடுக்குகைக்கான வழக்கு நடவடிக்கையைக் கோப்பிடுமாறு தேவைப்படுத்தலாம்.

*ஒடுக்குதல்.*

**19.** தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்று, பணிப்பாளரினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மேல், அத்தகைய நுண்நிதியளிப்புக் கம்பெனியை ஒடுக்கும்படி கட்டளையிடலாமென்பதுடன், அதற்கிணங்க, நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கமைவாகக் கம்பெனிகளை ஒடுக்குதல் தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய நுண்நிதியளிப்புக் கம்பெனியை ஒடுக்குதலுக்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

## பாகம் VIII

### நுண்நிதியளிப்பு அரசாங்கஞ்சாரா ஒழுங்மைப்புக்கள்

*அரசாங்கம்சாரா ஒழுங்கமைப்பு பதிவுச்சான்றிதழுக்காக விண்ணப்பித் தல்.*

**20.** (1) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பதாமாண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவுசெய்தலும் மேற்பார்வைசெய்தலும்) சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்பொன்று (இதனகத்துப்பின்னர் நுண் நிதியளிப்பு 'அசாஒ' எனக் குறிப்பீடு செய்யப்படும்) நுண்நிதியளிப்பு அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்பாக இருப்பதற்கான பதிவுச் சான்றிதழொன்றுக்காக விண்ணப்பிப்பதற்குத் தகவுடையதாகும்.

(2) ஒரு நுண்நிதியளிப்பு 'அசாஒ' ஆன பதிவுச் சான்றிதழொன்றுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் (இப்பாகத்தில் "பதிவாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்களின் பதிவாளருக்கு, அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் காலத்துக்குக்காலம் பதிவாளரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும், அத்தகைய பதிவுக்கான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகவும், அத்தகைய தகவலுடன் சேர்த்தும், செய்யப்படுதல் வேண்டும்.

(3) பதிவாளர் அத்தகைய விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டதன்மேல் அவசியமென அவர் கருதுகின்றவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்வதுடன், அத்தகைய மேலும் தகவல்களையும், ஆவணங்களையும் கோரலாமென்பதுடன்,-

(i) விண்ணப்பகாரர், அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் காலத்துக்குக்காலம் பதிவாளரினால் விதிக்கப் படக்கூடியவாறான பதிவுக்கான கட்டளைக்கற்களுடன் இணங்கியொழுகியுள்ளதென்றும்; அத்துடன்

(ii) விண்ணப்பகாரரைப் பதிவுசெய்தல், அதன் கடன் கொடுநரினதும் ஏனைய பாக்கியதாரரின் நலன்களுக் குப் பங்கம் விளைவிக்காதென்றும்,

அவர் திருப்திப்படின், பதிவாளர் தகுதியானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமை வாக, நுண்நிதியளிப்பு 'அசாஒ' ஆக பதிவுச் சான்றிதழொன்றை வழங்கலாம் அல்லது அவர் அவ்வாறு திருப்திப்படாவிடின், விண்ணப்பத்தை நிராகரித்து அவசியமானவையென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களை வழங்கலாம்.

*சான்றிதழை வெளிக்காட்டி வைத்தல்.*

**21.** நுண்நிதியளிப்பு 'அசாஒ' ஒவ்வொன்றும் அதன் பதிவுச் சான்றிதழை அதன் பிரதான தொழிலிடத்திலும் அத்தகைய சான்றிதழின் பிரதியொன்றை அதன் கிளைகளுள் ஒவ் வொன்றிலும் வெளிக்காட்டிவைத்தல் வேண்டும்.

*நுண்நிதியளிப்பு அசாஒ பற்றிய இடாப்பு.*

**22.** நுண்நிதியளிப்பு 'அசாஒ' பற்றிய இடாப்பொன்றைப் பதிவாளர் பேணுதல் வேண்டும்.

*பதிவாளர் விதிகளை ஆக்குதல்.*

**23.** (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் மற்றும் இச்சட்டத்தின் IX ஆம் பாகத்தின் நியதிகளின்படி சபையால் வழங்கப்பட்ட நியமங்கள், கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டு நெறிகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகப் பதிவாளர் விதிகளை ஆக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பதிவாளர், குறிப்பாக, பின்வரும் கருமங்கள் எல்லாம் தொடர்பில் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் காலத்துக்குக்காலம் விதிகளை ஆக்கலாம்:-

(அ) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் பதிவுக்கான கட்டளைக்கற்கள்;

(ஆ) நுண்நிதியளிப்பு 'அசாஓ' வினால் பதிவாளருக்குச் செலுத்தப்படற்பாலதான ஆண்டுக் கட்டணம்;

(இ) ஒரு நுண்நிதியளிப்பு 'அசாஓ' இன் அறிக்கையிடுதல் மற்றும் வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள்;

(ஈ) நுண்நிதியளிப்பு 'அசாஓ' வினால் கடன்களின்மீதும் கடன் வசதிகளின்மீதும் விதிக்கப்படக்கூடிய ஆகக் கூடிய வட்டிவீதங்கள் உள்ளடங்கலாக ஒரு நுண்நிதியளிப்பு 'அசாஓ' வினால் வழங்கப்படவேண்டிய அத்தகைய கடன்களுக்கும் கடன்வசதிகளுக்குமான நியதி நிபந்தனைகள்;

(உ) சேமிப்புத் திரட்டலின் மீதான நியதி நிபந்தனைகளும் அத்தகைய சேமிப்புகள்மீது செலுத்தப்படற்பாலனவான ஆகக்கூடிய வட்டிவீதங்களும்;

(ஊ) நிலுவையாகவுள்ள வைப்புக்கள் நிலுவையாகவுள்ள கடன்களுக்குக் கொண்டுள்ள ஆகக்கூடிய விகிதம்;

(எ) கடன்பெறுநர்களினதும் வைப்பீட்டாளர்களினதும் எண்ணிக்கை;

(ஏ) பாவனையாளர் பாதுகாப்பு;

(ஐ) நுண்நிதியளிப்பு 'அசாஓ' வினால் பேணப்படவேண்டிய தேறிய சொத்துக்கள்;

(ஒ) நுண்நிதியளிப்பு 'அசாஓ' வினால் பின்பற்றப்படவேண்டிய உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர்முகாமை மற்றும் ஒரு கூட்டிணைப்பு ஆளுகைக் கோவை;

(ஓ) நுண்நிதியளிப்பு 'அசாஓ' வினால் கொண்டு நடாத்தப்படக்கூடிய செயற்பாடுகளின் வகைகளின் மீதான மட்டுப்பாடு;

(ஔ) இப்பாகத்தின்கீழ் பயன்படுத்தப்படவேண்டிய படிவங்கள்.

*(3) பதிவாளரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.*

*நிதிக்கூற்றை வழங்குவதற்கான கடமை.*

***24.*** *(1) ஒவ்வொரு நுண்நிதியளிப்பு 'அசாஒ' வும் பதிவாளரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும், வடிவத்திலும் மற்றும் கால இடைவெளிகளிலும் அல்லது நேரங்களிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து கொடுத்துதவுதல் வேண்டும்.*

*(2) நுண்நிதியளிப்பு 'அசாஒ' வினால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.*

*பதிவாளர், கணக்குப் புத்தகங்கள் முதலியவற்றைப் பரிசோதனை செய்யலாம்.*

***25.*** *(1) பதிவாளர் அல்லது அதற்கென அவரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலர், எந்நேரத்திலும், ஏதேனும் நுண்நிதியளிப்பு 'அசாஒ' வின் கணக்குப் புத்தகங்களையும் பதிவேடுகளையும் பரிசோதனை செய்யலாம் என்பதுடன், அந்நோக்கத்துக்காக பின்வருவனவற்றுள் ஏதேனுமொன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றைச் செய்யலாம்:-*

*(அ) ஏதேனும் நுண்நிதியளிப்பு 'அசாஒ' வை அல்லது ஏதேனும் நுண்நிதியளிப்பு 'அசாஒ' வின் ஒருபணிப்பாளரை, முகாமையாளரை, ஊழியரை அல்லது கணக்காய்வாளரை அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவல்களையும் அவருக்குக் கொடுத்துதவும்படியும், அத்தகைய நுண்நிதியளிப்பு 'அசாஒ' வின் புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புக்கள், இடாப்புக்கள் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களைச் சோதனைக்குக் காண்பிக்கும்படியும், அத்தகைய புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புக்கள், இடாப்புக்கள் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களின் தேவைப்படுத்தப்பட்டவாறான மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை ஏதேனும் வடிவத்தில் வழங்கும்படியும் தேவைப்படுத்தலாம்;*

(ஆ) ஒரு நுண்நிதியளிப்பு 'அசாஒ' வின் புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புக்கள், இடாப்புக்கள் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களைப் பதிந்து பரிசோதனை செய்யலாமென்பதுடன், அத்தகைய புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புக்கள், இடாப்புக்கள் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களின் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட அல்லது அல்லாத பிரதிகளை ஏதேனும் வடிவத்தில் பெறலாம்;

(இ) ஏதேனும் நுண்நிதியளிப்பு 'அசாஒ' வை, அல்லது ஏதேனும் நுண்நிதியளிப்பு 'அசாஒ' வின் ஒரு பணிப்பாளரை, முகாமையாளரை, ஊழியரை அல்லது கணக்காய்வாளரை அத்தகைய நுண்நிதியளிப்பு 'அசாஒ' வின் கணக்குகளைச் சமர்ப்பிக்கும்படியும், அத்தகைய தகவல்களை கொடுத்துதவும்படியும், பதிவாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுவதற்காக அத்தகைய புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புக்கள், இடாப்புக்கள் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களைக் காண்பிக்கும்படியும் தேவைப்படுத்தலாம்;

(2) அத்தகைய பரிசோதனைக்கான ஆகுசெலவு, நுண்நிதியளிப்பு 'அசாஒ' விடமிருந்து அறவிடப்படலாம்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆள் ஒவ்வொருவரின்மீதும் விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் அவரது கடமையாதல் வேண்டுமென்பதுடன்,-

(அ) இப்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலை வழங்குவதற்கு அல்லது ஏதேனும் புத்தகம், பதிவேடு, கோப்பு, இடாப்பு அல்லது அத்தகைய வேறு ஆவணத்தை சோதனைக்காகக் காண்பிப்பதற்குத்தவறுகின்றவரான;

(ஆ) பொய்யான அல்லது பூர்த்தியற்ற அல்லது பிழையான தகவல், புத்தகம், பதிவேடு, கோப்பு, இடாப்பு அல்லது அத்தகைய வேறு ஆவணத்தை வழங்குகின்றவரான; அல்லது

(இ) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் பணியைப் புரிகையில் பதிவாளருக்கு அல்லது (1) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு முட்டுக்கட்டையிடுகின்றவரான,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

பதிவாளரின் தத்துவங்கள்.

**26**. ஒரு நுண்நிதியளிப்பு 'அசாஓ'-

(அ) அதன் வைப்பீட்டாளர்களினதும் ஏனைய கடன்கொடுநரினதும் நலனுக்குப் பாதகமாகவுள்ள நிலையுறுதியற்ற அல்லது முறையீனமான நிதிச்செயல்முறைகளைப் பின்பற்றி அதன் தொழிலை கொண்டு நடாத்துகின்றது அல்லது கொண்டுநடாத்தும் வழிமுறையில் உள்ளது என; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் பணிப்பு, விதி, கட்டளை அல்லது தேவைப்பாட்டை மீறியுள்ளது என அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளது என,

பதிவாளர் அபிப்பிராயப்படுமிடத்து, பதிவாளர் பின்வரும் நடவடிக்கைகளுள் ஏதேனும் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றைச் செய்யலாம்:-

(i) அத்தகைய ஏதேனும் வழமையை விட்டொழிக்கும்படி அத்தகைய நுண்நிதியளிப்பு 'அசாஓ' வைப் பணிக்கலாம்;

(ii) அத்தகைய நுண்நிதியளிப்பு 'அசாஓ' இணங்கியொழுகத் தவறியுள்ள, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட விதி அல்லது தேவைப்பாட்டுக்கு உடனடியாக அல்லது பதிவாளரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய நுண்நிதியளிப்பு 'அசாஓ' வைப் பணிக்கலாம்;

(iii) அத்தகைய வழமையிலிருந்து அல்லது மீறுகையிலிருந்து விளைகின்ற எதிர்மறையான நிலைமைகளைச் சரி செய்வதற்கு அவசியமான நடவடிக்கையை எடுக்கும்படி அத்தகைய நுண்நிதியளிப்பு 'அசாஒ' வைப் பணிக்கலாம்;

(iv) நுண்நிதியளிப்பு 'அசாஒ' வில் அல்லது அது தொடர்பான ஏதேனும் பணியை நிறைவேற்றுவதிலிருந்து அந் நுண்நிதியளிப்பு 'அசாஒ' வின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது கட்டுப்பாட்டாளரைத் தடுக்கலாம்;

(v) நுண்நிதியளிப்பு 'அசாஒ' வின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது ஊழியரை அகற்றலாம்;

(vi) நுண்நிதியளிப்பு 'அசாஒ' வை, அதன் பணிப்பாளர்கள் சபையை மீளவமைப்பதற்காக ஒழுங்கேற்பாடு செய்வதன்மூலம் மீள ஒழுங்கமைக்கலாம் :

ஆயின் எவ்வாறாயினும் பதிவாளரானவர், இப்பிரிவின் (iv)ஆம்,(v)ஆம் அல்லது (vi) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட நடவடிக்கைகளுள் எதனையும் எடுக்குமுன்னர், அத்தகைய பணிப்பாளர், முகாமையாளர், கட்டுப்பாட்டாளர், ஊழியர் அல்லது பணிப்பாளர் சபைமீது, விடயத்துக்கேற்ப, அவருக்கெதிராக இயைபான உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு ஏன் நடவடிக்கை எடுக்கப்படலாகாது என்பதற்கு, ஓர் அறிவித்தல் கொடுக்கப்படும் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுள், காரணங்காட்டும்படி விடயத்துக்கேற்ப, அவரை அல்லது அதனைத் தேவைப்படுத்தி அத்தகைய அறிவித்தலைச் சேர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், திருப்தியான காரண மெதுவும் தரப்படாமை குறித்துத் தம்மைத் திருப்திப்படுத்தலும் வேண்டும்.

*பதிவை இல்லாதாக்கு வதற்குப் பதிவாளரின் தத்துவம்.*

***27.*** (1) பதிவாளர், பின்வரும் ஏதுக்களுள் ஏதேனும் ஒன்றின் மீது அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின்மீது நுண்நிதியளிப்பு 'அசாஒ' வின் பதிவை இல்லாதாக்கலாம் :-

(அ) அதனால் உறப்பட்ட ஏதேனும் தனிசு வருமதியாக வருவதன்மேல் அத்தகைய தனிசைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தவறுவதன்மேல்;

(ஆ) அதன் கடன்கொடுநருடன் ஏதேனும் இணக்கத்தை அல்லது ஒழுங்கேற்பாட்டைச் செய்வதற்கு உத்தேசிப்பதன்மேல் அல்லது செய்வதன்மேல், அல்லது ஒழித்துக்கட்டப்படுவதன்மேல் அல்லது ஒடுக்கப்படுவதன்மேல் அல்லது வேறுவகையாகக் கலைக்கப்படுவதன்மேல்;

(இ) வரையறுக்கப்பட்ட சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக் கொள்ளாதொழிவதன்மேல்;

(ஈ) இச்சட்டத்திலுள்ள எவையேனும் ஏற்பாடுகளுக்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட, விதிக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஏதேனும் பணிப்பு, தேவைப்பாடு, விதி, கட்டளை அல்லது தீர்மானத்துக்கு முரணாகச் செயலாற்றுவதன்மேல்;

(உ) ஆண்டுப் பதிவுக்கட்டணத்தைச் செலுத்தத் தவறுவதன்மேல்;

(ஊ) அதன் வைப்பீட்டாளர்களினதும் ஏனைய கடன்கொடுநரினதும் நலன்களுக்குப் பாதகம் விளைவிக்கக்கூடியவொரு முறையில் அதன் தொழிலைக் கொண்டு நடாத்துவதன்மேல்;

(எ) பதிவாளருக்குப் பொய்யான, பிழைவழியுய்க்கும் அல்லது செம்மையற்ற தகவலைக் கொடுத்துதவுவதன்மேல் அல்லது முக்கியமான நிகழ்வுகளை மறைப்பதன்மேல் அல்லது வெளிவிடுவதற்குத் தவறுவதன் மேல்.

(2) பதிவாளர், பதிவுசெய்யப்பட்ட நுண்நிதியளிப்பு 'அசாஒ' வின் பதிவை இல்லாதாக்குமுன்னர், அதன் பதிவு ஏன் இல்லாதாக்கப்படுதலாகாதென எழுத்திலான அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் காரணங்காட்டும்படி அத்தகைய பதிவுசெய்யப்பட்ட நுண்நிதியளிப்பு 'அசாஒ' வை தேவைப்படுத்துகின்ற அத்தகைய அறிவித்தலை அத்தகைய பதிவுசெய்யப்பட்ட நுண்நிதியளிப்பு 'அசாஒ' வுக்குச் சேர்ப்பித்தல் வேண்டும்.

(3) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் நுண்நிதியளிப்பு 'அசாஒ' காரணங்காட்டத் தவறுமிடத்து, பதிவாளர், பதிவை இல்லாதாக்கலாம்.

(4) அத்தகைய பதிவுசெய்யப்பட்ட நுண்நிதியளிப்பு 'அசாஒ' (2)ஆம் உட்பிரிவின்கீழ் அதற்கு வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு இணங்கியொழுகி, குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் காரணங்காட்டுமிடத்து, பதிவாளர், அளிக்கப்பட்ட காரணங்களைக் கவனத்துட்கொண்டபின்னரும் பதிவுசெய்யப்பட்ட நுண்நிதியளிப்பு 'அசாஒ' வின் ஆட்சேபனைகளை ஆதாரப்படுத்துவதற்கு அதனைக் கேட்டபின்னரும்-

(அ) அத்தகைய நுண்நிதியளிப்பு 'அசாஒ' அதன் பதிவு ஏன் இல்லாதாக்கப்படுதலாகாதெனப் போதிய காரணங் காட்டியுள்ளதென்று அவர் திருப்திப்படின், பதிவை இல்லாதாக்காதுவிடலாம்; அல்லது

(ஆ) அத்தகைய பதிவுசெய்யப்பட்ட நுண்நிதியளிப்பு 'அசாஒ' அதன் பதிவு ஏன் இல்லாதாக்கப்படுதலாகாதெனப் போதிய காரணங்காட்டவில்லையென்று அவர் திருப்பதிப்படின், பதிவை இல்லாதாக்கலாம்.

(5) பதிவு இல்லாதாக்கப்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட நுண்நிதியளிப்பு 'அசாஒ' வுக்கு அத்தகைய இல்லாதாக்குகைபற்றி உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இல்லாதாக்குகை அத்தகைய அறிவிப்புத்திகதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும். பதிவாளர், இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்த ஒரு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலச் செய்தித்தாளிலேனும் அத்தகைய இல்லாதாக்குகை பற்றிய அறிவித்தலை வெளியிடுதல் வேண்டும்.

(6) நுண்நிதியளிப்பு 'அசாஒ' வின் பதிவுச்சான்றிதழ் இல்லாதாக்கப்படுமிடத்து, பதிவாளர், 22ஆம் பிரிவின்கீழ் பேணப்பட்ட இடாப்பிலிருந்து அத்தகைய நுண்நிதியளிப்பு 'அசாஒ' வின் பெயரை அகற்றுதல் வேண்டுமென்பதுடன் அவசியமென அவர் கருதுகின்றவாறான அத்தகைய பணிப்புக்களை அத்தகைய அரசாங்கஞ்சார ஒழுங்கமைப்புக்கு வழங்கலாம்.

## பாகம் IX

## சபையினால் விதிக்கப்பட்ட கோட்பாடுகளும், நியமங்களும், வழிகாட்டுநெறிகளும்

கோட்பாடுகள், நியமங்கள் மற்றும் வழிகாட்டு நெறிகள்.

**28.** (1) இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், சபையானது, நுண்நிதியளிப்புத் தொழில் மற்றும் கடன்வழங்குச் செயற்பாடுகள் வெளிப்படையான, உயர்தொழில்சார் மற்றும் மதிநுட்பமான முறையில் கொண்டு நடாத்தப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்கெனவும் மற்றும் பாவனையாளர் பாதுகாப்புக்காக அத்தகைய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதலையும் மேற்பார்வை செய்தலையும் பலப்படுத்துவதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் அவற்றில் தரஞ்சார் சீராக்கங்களைச் செய்வதற்கும் பின்வருவன தொடர்பில் கோட்பாடுகளையும் நியமங்களையும் நிலைநாட்டலாம் அல்லது வழிகாட்டுநெறிகளை வழங்கலாம்:-

(அ) இச்சட்டத்தின் VIII ஆம் பாகத்தின் நியதிகளின்படி வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் பதிவாளரினால் ஒழுங்குபடுத்தப்பட்ட நுண்நிதியளிப்பு 'அசாஒ' கள்; அத்துடன்

(ஆ) நுண்கடன்வழங்கு அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்புக்கள்.

(2) வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் பதிவாளர், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நுண்நிதியளிப்பு 'அசாஒ' களை ஆளுகின்ற தோதான விதிகளை ஆக்குவதன் மூலம் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சபையினால் விதிக்கப்பட்ட கோட்பாடுகள், நியமங்கள் அல்லது வழிகாட்டுநெறிகளுக்குப் பயனளித்தல் வேண்டும்.

(3) இப்பிரிவிலுள்ளதெதுவும், இச்சட்டத்தின் VIII ஆம் பாகத்தின் நியதிகளின்படி பதிவுசெய்யப்பட்டதொன்று தவிர்ந்த ஓர் அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்பு வரையறுக்கப்பட்ட சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக்கொள்வதனை இயலச்செய்வதாகக் கருதப்படுதலாகாது.

(4) சபையானது, (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நுண்நிதியளிப்பு 'அசாஒ' வின் மாதாந்த, காலாண்டு, அரை யாண்டு அல்லது ஆண்டு நிதித் தரவுகளை வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் பதிவாளரிடமிருந்து கோரலாம்.

## பாகம் X

### குற்றவழக்குக்கெதிரான விடுபாட்டுரிமை

**29.** (1) சபைக்கெதிராக அல்லது அதன் உறுப்பினரொரு வருக்கெதிராக, மத்திய வங்கியின் பணிப்பாளருக்கெதிராக அல்லது எவரேனும் அலுவலருக்கெதிராக அல்லது ஏதேனும் கடமையை அல்லது பணியை நிறைவேற்றுவதற்கு இச்சட்டத்தின் கீழ் சபையினால் அல்லது பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப் பட்ட வேறெவரேனுமாளுக்கெதிராக, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப் பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் பணிப்பு, விதி, கட்டளை அல்லது தேவைப்பாட்டின்கீழ் அத்தகைய ஆளினால் செய்யப் பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயல் காரணமாக, அத்தகைய குற்றவழக்குக்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னனுமதி முதலில் பெறப்பட்டிருந்தாலொழிய, ஏதேனும் நீதிமன்றத்தில் குற்றவழக்கெதுவும் தொடுக்கப்படு தலாகாது. குற்றவழக்குக் கெதிரான விடுபாட்டுரிமை.

(2) சபையின் உறுப்பினரொருவரினால் மத்திய வங்கியின் பணிப்பாளரினால் அல்லது எவரேனும் அலுவலரினால் அல்லது சேவையாளரினால் அல்லது சபையினால் அதிகார மளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளினால், விடயத்துக்கேற்ப, இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் பணிப்பு, விதி, கட்டளை அல்லது

தேவைப்பாட்டின்கீழ் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயல்தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய ஆளுக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, சபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் XI

### பொது

*நிதித்தொழில் சட்டம் மற்றும் வங்கித் தொழில் சட்டத்தின் IXஅ என்னும் பாகம் ஏற்புடையன வாகாமை.*

**30.** இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தினதும் மற்றும் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் IX அ என்னும் பாகத்தின தும் ஏற்பாடுகள், ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனிக்கு பதிவுசெய்யப்பட்ட நுண்நிதியளிப்பு ‘அசாஒ’ க்கு அல்லது நுண்கடன்வழங்கு அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப் புக்கு ஏற்புடையனவாதலாகாது.

*ஏனைய சட்டங்களின் பயன்.*

**31.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி, கட்டளை அல்லது விதி, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறி ருப்பினும், பயனுடையனவாதல் வேண்டும்.

*நுண்நிதி யளிப்புத் தொழிலைக் கொண்டு நடாத்து வதற்கான மட்டுப்பாடு.*

**32.** உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்பு கம்பெனி, ஒரு பதிவுசெய்யப்பட்ட நிதியளிப்பு ‘அசாஒ’ அல்லது 2ஆம் பிரிவின்கீழ் இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது ஏற்புடைமையி லிருந்து விலக்களிக்கப்பட்ட ஒருநிறுவனம் தவிர்ந்த ஆளெவரும் நுண்நிதியளிப்புத் தொழிலைக் கொண்டு நடத்துதலாகாது.

*நிலைபெயர் கால ஏற்பாடுகள்.*

**33.** முப்பத்தோராம் பிரிவில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏதேனும் பாகம் நடைமுறைக்குவரும் திகதிக்கு முற்போந்த நாளன்று நுண்நிதியளிப்புத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற எவரேனுமாள்-

(அ) இச்சட்டத்தின் ஏதேனும் பாகம் நடைமுறைக்கு வருகின்ற திகதியிலிருந்து அத்தகைய தொழிலைப் பதினெட்டுமாதக் காலப்பகுதிக்குத் தொடர்ந்து கொண்டு நடாத்தலாம்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றுக்கு விண்ணப்பித்தலும் வேண்டும்:-

(i) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் சபையினால் குறித்துரைக்கப்படக் கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்குள் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியாக அவரது தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான ஓர் உரிமம்:

ஆயின், எவ்வாறாயினும், Iஆம் பாகம் நடைமுறைக்குவரும் நாளன்று இச்சட்டத்தின் VIII ஆம் பாகம் நடைமுறையில் இல்லாதிருப்பது எவ்வாறிருப்பினும், அத்தகைய ஆள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனியாக அவரது தொழிலைத் தொடர்வதற்கான உரிமமொன்றுக்காக விண்ணப்பித்தலும் வேண்டும்;

(ii) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் பதிவாளரினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள்

நுண்நிதியளிப்பு 'அசாஓ' வாக அவரது தொழிலை தொடர்வதற்கான ஒரு பதிவுச் சான்றிதழ்;

(இ) மேலே பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதி, பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியினுள் அடங்குதல் வேண்டும்.

"நுண்நிதியளிப்பு" என்னும் பதத்தைப் பயன்படுத்துவதன் மீதான மட்டுப்பாடு.

**34.** உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனி, நுண் நிதியளிப்பு 'அசாஓ' அல்லது இச்சட்டத்தின் 2ஆம் பிரிவின்கீழ் விலக்களிக்கப்பட்ட நிறுவனம் தவிர்ந்த வேறு ஆளெவரும், சபையின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி, அதன் பெயரில் தனியாகவோ அல்லது வேறேதேனும் சொல்லுடன் இணைத்தோ "நுண்நிதியளிப்பு" என்னும் சொற்களை அல்லது அதன் வழிச்சொற்களுள் எதனையும் அல்லது அதன் எழுத்துப் பெயர்ப்பை அல்லது வேறேதேனும் மொழியில் அதற்குச் சமமானதைப் பயன்படுத்துதலாகாது.

தவறுகள்.

**35.** (1) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் விதி, பணிப்பு, கட்டளை அல்லது தேவைப்பாட்டை மீறுகின்ற அல்லது அதற்கிணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத் தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பது டன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத வொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றி னால் புரியப்படுமிடத்து, அப்போது-

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன் றாகவிருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும் அல்லது செயலாளரும்;

(ஆ) அவ்வாட்கள் குழு ஒரு குழுமமாகவிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அல்லது

(இ) அவ்வாட்கள் குழு ஒரு குழுமம் தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், அத்தகைய குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர் ஒருவர் அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்படா குழுவின் உறுப்பினர் ஒருவர், அத்தகைய தவறு தாம் அறியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென அவர் எண்பித்தால், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

*அலுவலர்களின் செயல்களுக்காகச் சபை பொறுப்பாக விருத்தல்.*

**36.** (1) சபையினால் ஆக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதிகள் எவையேனுமிருப்பின் அவற்றுக்கமைவாக, சபையானது, இச்சட்டத்தின் நோக்கங்களுள் எவற்றுக்காகவும் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மத்திய வங்கியின் அலுவலரொருவருக்கு அல்லது வேறெவரேனுமாளுக்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம்; எவ்வாறாயினும், அத்தகைய அதிகாரவளிப்பின்கீழ் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அத்தகைய அலுவலரினால் அல்லது ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனும் செயலுக்காகச் சபையானது பொறுப்பாகவிருத்தலும் தொடர்ந்து பொறுப்பாகவிருத்தலும் வேண்டும்.

(2) சபையானது இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்களுள் மற்றும் கடமைகளுள் எவற்றையும் மத்திய வங்கியின் எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் கையளிக்கலாம். எவ்வாறாயினும், அத்தகைய அலுவலருக்குக் கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அத்தகைய அலுவலரினால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயலுக்காகச் சபையானது பொறுப்பாகவிருத்தலும் தொடர்ந்து பொறுப்பாகவிருத்தலும் வேண்டும்.

பொருள் கோடல்.

**37.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி–

"சபை" என்பது, (422ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச் சபை எனப் பொருள்படும்;

"மத்திய வங்கி" என்பது, (422ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப் பொருள்படும்;

"வைப்பு" என்பது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 2011 ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பணிப்பாளர்" என்பது, நுண்நிதியளிப்புக் கம்பெனிகள் என்னும் விடயம் மத்திய வங்கியின் எந்தப் பகுதிக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அப்பகுதித் தலைவர் என்று பொருளாகுமென்பதுடன், பதில் பணிப்பாளரொருவரையும் உள்ளடக்கும்;

"உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனி" என்பது, இச்சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட கம்பெனியொன்று எனப் பொருள்படும்;

"திரவச் சொத்துக்கள்" என்பது,–

(அ) கையிலுள்ள காசு;

(ஆ) எவரேனும் வங்கியாளரின் சோந்தையிலிருந்து அல்லது பொறுப்பிலிருந்து விடுபட்டனவாக, வர்த்தக வங்கியொன்றில் ஒரு நடப்பு அல்லது வைப்புக் கணக்கிலுள்ள மீதிகள்;

(இ) ஓராண்டினுள் முதிர்வடைகின்றவையும், ஏதேனும் சோந்தையிலிருந்து அல்லது பொறுப்பிலிருந்து விடுபட்டவையுமான இலங்கை அரசாங்கத் திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும்;

(ஈ) ஓராண்டினுள் முதிர்வடைகின்றனவும், ஏதேனும் சோந்தையிலிருந்து அல்லது பொறுப்பிலிருந்து விடுபட்டனவுமான இலங்கை அரசாங்கப் பிணையங்கள்; அத்துடன்

(உ) ஓராண்டினுள் முதிர்வடைகின்றவையும் ஏதேனும் சோந்தையிலிருந்து அல்லது பொறுப்பிலிருந்து விடுபட்டவையுமான இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள்; அத்துடன்

(ஊ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு சொத்துக்கள்,

எனப் பொருள்படும்;

"நுண்நிதியளிப்புத் தொழில்" என்பது, வைப்புக்களை ஏற்றுக் கொள்வதுடன்:-

(அ) ஏதேனும் வடிவத்தில் உள்ள நிதிசார் வசதியை;

(ஆ) வேறு நிதிச் சேவைகளை; அல்லது

(இ) ஏதேனும் வடிவத்திலான நிதிசார் வசதியை மற்றும் வேறு நிதிச் சேவைகளை,

இச்சட்டத்திற்கான அட்டவணையுடன் இசைந்தொழுகும் வகையில் முக்கியமாகக் குறைந்த வருமானம் பெறும் ஆட்களுக்கும் மற்றும் நுண்தொழில் முயற்சிகளுக்கும் வழங்குதல் எனப் பொருள்படும்;

"நுண்நிதியளிப்பு அசாஒ" என்பது, 1980 ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதும் மட்டுப்படுத்தப்பட்ட சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் பதிவாளரினால் இச்சட்டத்தின்கீழ் பதிவுச் சான்றிதழொன்று வழங்கப்பட்டதுமான ஓர் அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்பு எனப் பொருள்படும்;

"நுண்கடன்வழங்கு அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்பு" என்பது, 1980 ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டதும் கடன் வழங்கு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதும் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக் கப்படாததுமான ஓர் அரசாங்கஞ்சாரா ஒழுங் கமைப்பு எனப் பொருள்படும்;

"அமைச்சர்" என்பது, நுண்நிதியளிப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சர் எனப் பொருள்படும்;

"தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது,-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவ கத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தி னால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ள வரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவை யினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியாள் ஒருவர்; அல் லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ அக்கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**38.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை** (பிரிவு 9)

உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்பு கம்பெனியொன்று பின்வரும் தொழில்களில் ஈடுபடலாம்:-

(அ) வீடமைப்பு உட்பட, எல்லா வகையினவையுமான பொருளாதாரச் செயற்பாடுகளுக்காகச் சபை விதிக்கக்கூடிய அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைவாக, காசாக அல்லது பொருளாக, இணையுறு பிணைப்பொறுப்புடனோ அல்லது அதுவின்றியோ, நிதிசார் வசதியை வழங்குதல்;

(ஆ) கால மற்றும் சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் 1988ஆம் ஆண்டின் 30ம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துவதனை எவ்வாறாயினும் தவிர்த்து, வைப்பு, சேமிப்பு மற்றும் வேறு ஒத்த கணக்குகளைத் திறத்தல், பேணுதல் அத்துடன் முகாமை செய்தல்;

(இ) அதனால் வழங்கப்பட்ட கடன்களுக்கும் முற்பணங்களுக்கும் பிணைப்பொறுப்பளிக்கும் நோக்கத்துக்காக ஏதேனும் வகையினதான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் அடகுவைப்புகள், ஈடுகள், அடைமானங்கள் அல்லது சாட்டுதல்கள் என்பவற்றை ஏற்றுக்கொள்ளுதல்;

(ஈ) கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உள்ளீடுகள், கால்நடைகள், எந்திரத் தொகுதி மற்றும் கைத்தொழில் மூலப்பொருட்கள் என்பவற்றை வாங்குவதற்கும், விற்பனை செய்வதற்கும், வழங்குவதற்கும் கடன் வழங்குதல் மற்றும் அத்தகைய பண்டங்களை அல்லது கால்நடைகளை விற்பனை செய்வதற்காக ஏதேனும் ஒழுங்கமைப்புக்கான முகவரொருவராகச் செயலாற்றுதல்;

(உ) அதன் பணங்களை மதிநுட்பமான முறையில் முதலீடு செய்தல்;

(ஊ) களஞ்சியப்படுத்துகை மற்றும் பாதுகாப்பான கட்டுக்காப்பு வசதிகளை வழங்குதல்;

(எ) சிறிய தொழில்கள், சுய தொழிற் கருத்திட்டங்கள் மற்றும் குடிசைக் கைத்தொழில்கள் என்பவற்றிலான முதலீடுகள் தொடர்பாக அதன் வாடிக்கையாளர்களுக்கு உயர்தொழில்சார் மதியுரை வழங்குதல்;

(ஏ) நுண்நிதியளிப்புத் தொடர்பான பல்வேறு இடர்களுக்கெதிராகக் காப்பதற்கு வாடிக்கையாளர்களுக்குச் சேவைகளும் வசதிகளும் வழங்குதல்;

(ஐ) வாடிக்கையாளர்களுக்கு முகாமைசார், சந்தைப்படுத்தல், தொழினுட்ப மற்றும் நிருவாக மதியுரையை அளித்தல் அத்துடன் அத்தகைய துறைகளில் சேவைகளைப் பெறுவதில் அவர்களுக்கு உதவுதல்;

(ஒ) வாடிக்கையாளர்களுக்குத் தொழினுட்ப உதவியையும் பயிற்சியையும் வழங்குதல்;

(ஓ) இயைபான அதிகாரசபையிடமிருந்து அவசியமான உரிமத்தை அல்லது அங்கீகாரத்தைப் பெற்ற பின்னரும் அத்தகைய அதிகாரசபையின் அத்தகைய விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவாகவும், நிதிக் குத்தகைத் தொழிலையும், அடகுத் தரகுத் தொழிலையும் மற்றும் காப்புறுதித் தொழிலையும் நடாத்துதல்;

(ஔ) இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை, வேறேதேனும் தொழிலில் ஈடுபடுவதற்கு உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்பு நிறுவனத்துக்கு அதிகாரமளிக்கலாமோ அந்த வேறேதேனும் தொழில்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்